OS: 201/2024

Date: 14.11.2025

பெயர் : லட்சுமணன் **(வா.சா.2) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

1. வாதி, பிரதிவாதிகளை எனக்கு தெரியும் என்றால் தெரியும். முத்துமாணிக்கத்தின் தகப்பனாரும், தகப்பனாருடைய சகோதரர்களும் எப்போது பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. குருநாதன் பாகப்பிரிவினை மூலம் வந்த சொத்தை 2ம் பிரதிவாதியின் மகன்களுக்கு தான செட்டில்மெண்ட் எழுதிவைத்துவிட்டார் என்றால் அப்படிதான் கொஞ்சம் எழுதி வைத்துவிட்டதாக முத்துமாணிக்கம் சொன்னார். ஆனால் அது குருநாதனின் சம்பாதித்த சொத்தல்ல, பூர்வீக சொத்தாகும்.

2.அந்த மேற்படி சொத்து குருநாதனின் தகப்பனாரான மாதகவுண்டருக்கு சுயராஜ்ஜிய வகையில் பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. குருநாதனுடைய முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது. மேற்படி சொத்து மாதகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்பதால் மாதகவுண்டருடைய வாரிசுகள் தங்களுக்குள் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் பூர்வீக சொத்தை பிரித்து கொண்டார்கள். நான்சொல்வதுபோல அது பூர்வீக சொத்து அல்ல என்றாலும், அது வாரிசு அடிப்படையில் வந்த சொத்து என்றாலும் சரியல்ல.

3. பூபாலனின் மகன்களான 10, 11 பிரதிவாதிகளுக்கு குருநாதகவுண்டர் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் நடைமுறைக்கு வந்து வருவாய் துறை ஆவணங்களில், 10, 11 ம் பிரதிவாதிகளின் பெயருக்கு மாறிவிட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 10, 11 பிரதிவாதிகள்

தான் செட்டில்மெண்ட்படி வந்த சொத்தை அனுபவித்து வந்து அதில் வங்கியில் கடனும் பெற்றிருக்கிறார்கள் என்றால் சரியல்ல.

4. வழக்கு குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும், முத்துமாணிக்கம் சொல்லி கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எனவே எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

(ஒப்பம்/—த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.